# மெட்ரோ ரயில் நிலையங்களில் 2,000 பேருக்கு இலவச மருத்துவம்




மெட்ரோ ரயில் நிலையத்தில் நடந்த மருத்துவ முகாம். இடம்: வடபழனி.

சென்னை, பிப். 2–
மெட்ரோ ரயில் நிலையங்களில் நடந்த மருத்துவ முகாமில், 1,960 பேருக்கு, இலவச மருத்துவம் மற்றும் ஆலோசனை வழங்கப்பட்டது.

சென்னையில், விமான நிலையம் மற்றும் பரங்கி மலையில் இருந்து, சென்ட்ரல் வரையும்; விமான நிலையத்தில் இருந்து, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரையும், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

ஜன., 1 முதல், நேற்று முன்தினம் வரை, நேரு பூங்கா, கீழ்ப்பாக்கம், சென்ட்ரல், ஷெனாய் நகர், அண்ணா நகர் கிழக்கு, அண்ணா நகர் டவர், திருமங்கலம், கோயம்பேடு, சி.எம்.பி.டி., அரும்பாக்கம் மற்றும் வடபழனி நிலையங்களில், இலவச மருத்துவ முகாம் நடந்தது.

கடைசி நாளான, நேற்று முன்தினம், வடபழனி நிலையத்தில் நடத்தப்பட்ட முகாமில், 115 பேருக்கு மருத்துவம் மற்றும் ஆலோசனை அளிக்கப்பட்டது.

மொத்தம், 11 நாட்கள் நடந்த மருத்துவ முகாமில், 1,960 பேர் பயனடைந்துள்ளனர் என, மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.